வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 1/2021

வழக்கு சாட்சி LW9 / PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரபிக் உசேன், உதவி ஆய்வாளர், கணினி நுண்ணறிவு குற்றப்பிரிவு காவல் நிலையம், | ஜாதி | |
| கணவர்/தந்தை | சம்சுதீன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 39 |

தேதி 22.05.2025

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கணினி நுண்ணறிவு குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.11.2019 அன்று இரவு 20.00 மணிக்கு எம்.3 புழல் காவல் நிலையத்தில் நிலைய பணியில் இருந்தபோது திரு. ஹனிப் என்பவர் நிலையம் ஆஜராகி சொன்ன புகாரை எழுதி படித்து காண்பித்து பின்னர் எம்.3 காவல் நிலைய குற்ற எண். 571/2019 இதச பிரிவு 385 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ஹனிப், ரபிக் உல்இஸ்லாம், லால்முர்முலால், பப்லு ஆகியோரை விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மறுநாள் காலை 9 மணிக்கு சாட்சிகளான பாண்டியன், அமிர்தராஜ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே அ.த.சா.ஆ.4 மற்றும். அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் வாதியை விசாரித்தபோது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக தெரியவந்ததால் ஆட்டோவின் கடைசி நான்கு இலக்க எண்களான 6852 என்று கூறினார்கள். எனவே சட்டப்பிரிவு 385 @ 385, 506 (i) IPC ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை சமர்ப்பித்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாற்ற அறிக்கையானது அ.சா.ஆ.6 பின்னர் ஆட்டோவின் எண்களை வைத்து எதிரிகளை அடையாளம் கண்டு எதிரிகளை 28.11.2019 அன்று பகல் 12 மணியளவில் தாம்பரம் பைபாஸ் ரோடு புழல் சைக்கிள் ஷாப் அருகே சாட்சிகள் செந்தில்குமார், ராகுல் முன்னிலையில் விசாரணை செய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளிடமிருந்த பஜாஜ் ஆட்டோ எண். TN 05 BX 6852 வாகனம் மற்றும் பணம் ரூ. 8100னை மகஜர் மூலமாக சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியானது அ.சா.ஆ.7 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரானது அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளின் சாட்சியமானது தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை நிலையம் அழைத்து வந்து உரிய வழிக்காவலுடன் நீதிமன்ற பிணைக்கு அனுப்பி வைத்தேன்.

3. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பஜாஜ் ஆட்டோ எண். TN 05 BX 6852 வாகனம் மற்றும் பணம் ரூ. 8100னை படிவும் 95ன் மூலமாக நீதிமன்றத்தில் சான்று பொருளாக Pl.No. 12/2020 ஆக ஒப்படைவு செய்தேன். மேற்படி சான்று பொருளான ஆட்டோ எதிரியிடமும் பணம் ரூ. 8100 புகார்தாரரிடம் இடைக்காலமாக மனுவின்பேரில் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்டு உள்ளது. மேற்படி படிவம் 95ஆனது அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பஜாஜ் ஆட்டோ எண். TN 05 BX 6852 வாகனம் மற்றும் பணம் ரூ. 8100னை புகைப்படமானது (6 எண்ணிக்கையானது ) அ.சா.ஆ10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் நீதிமன்றத்தில் பிணையம் பெற்று பிணையில் இருந்து வருகிறார்கள். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்றே புகார் அளிக்கப்பட்டது என்றால் ஆமாம். புகார்தாரர் புகாரினை அவரே எழுதினாரா என்றால் இல்லை. அவர் கூறியதை கேட்டு நாங்கள் எழுதினோம். ஆட்டோவில் ஏறி இறங்கியதும் எதிரிகள் பணம் கேட்டதினை பொறுத்து புகார்தாரர் அருகில் இருந்தவர்களிடம் கேட்டாரா என்றால் இல்லை. நேரடியாக காவல் நிலையம்தான் வந்தார். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பெட்ரோல் பங்கில் இருந்த சிசிடிவி பதிவினை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. ஆனால் சிசிடிவி பார்த்து ஆய்வு செய்தோம். சம்பவம் சனிக்கிழமை நடந்ததாக புகாரில் கூறியுள்ளது என்றாலும், ஆனால் புகாரானது ஞாயிற்றுக்கிழமை பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்றால் எங்களது விசாரணையில் தெரியவந்தது.

**மறுவிசாரணை இல்லை.**